அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு கார்த்திகை-மார்கழி ஜனவரி 2017 முரசு 10 ஒலி 115

## தைப்பூச சிறப்பிதழ்



தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா அழைப்பிதழ்
உள்ளே...

*பிரதி ஒன்றுக்கு ரூ. 10/-* *ஆண்டு சந்தா ரூ. 120/-*

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழா அழைப்பிதழ்

அன்புள்ளம் கொண்ட ஆன்மநேய சகோதர சகோதரிகள் அனைவருக்கும் வந்தனம். உத்தர ஞான சிதம்பரம் என்று போற்றப்படும் வடலூர் பெருவெளியில் நம் திருவருட்பிரகாச வள்ளல் பெருமானாரால் நிறுவப்பட்ட சத்திய ஞானசபையில் ஞான நிறைவு நாளாம் தைப்பூச தினத்தன்று ஜோதி தரிசனப் பெருவிழா வருடந்தோறும் கொண்டாடப்படுகின்றது.

இவ்விழாவானது வருகின்ற 08.02.2017 புதன்கிழமையன்று கொடியேற்றத்துடன் துவங்கி, 09.02.2017 வியாழக்கிழமையன்று ஏழு திரை நீக்கி தைப்பூச ஜோதி தரிசனப் பெருவிழாவாக பல்வேறு ஆன்மீக சிறப்பு நிகழ்வுகளோடு நடைபெறவுள்ளது. உலகம் முழுவதிலிருந்தும் சன்மார்க்க சாதுக்களும், ஞானிகளும், தொண்டர்களும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்க உள்ளார்கள். இந்த விழாவில் தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் மற்றும் நண்பர்களும் கலந்துகொண்டு தொண்டு செய்து, ஜோதி தரிசனம் கண்டு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவராகிய திருவருட்பிரகாச வள்ளலாரின் திருவருளைப் பெற்று வாழ்வில் எல்லா வளங்களையும் அடைய அன்புடன் அழைகின்றோம்.

அவ்வமயம் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வடலூர் ரயில்வே ஸ்டேஷன் ரோட்டில் அமைந்துள்ள **TRM சாந்தி திருமண மண்டபத்திலும்** வடலூர் சத்திய ஞானசபை ஆர்ச் ரோட்டில் **அருட்ஜோதி அரங்க மேடை** அமைத்தும்

- அகவல் பாராயணம்
- சத்சங்கம்
- அன்னதானம்
- மகாமந்திர வேள்வி
- திருஅருட்பா இசை நிகழ்ச்சி

போன்ற சன்மார்க்க நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளது.

அன்பர்கள் தங்களால் இயன்ற உதவியைப் பொருளாகவோ, நிதியாகவோ அளித்து இப்புண்ணிய வைபவத்தில் பங்குகொள்ளலாம். தங்களின் நன்கொடைகளுக்கு 80G பிரிவின் கீழ் வருமானவரி விலக்கு உண்டு. நன்கொடை அளிக்க விரும்புவோர் வங்கி விபரத்திற்கு பக்கம் எண் 26ஐ பார்க்கவும்.

**ஆறுகால ஜோதி தரிசன விபரம்**

**நாள்: 09-02-2017**

காலை 6.00, 10.00, மதியம் 1.00,
இரவு 7.00, 10.00

**மறுநாள் : 10-02-2017**

காலை 5:00

**சித்திவளாகத் திருவறை தரிசனம்**

**நாள்: 11-02-2017 சனிக்கிழமை**

இடம்: மேட்டுக்குப்பம்
நேரம்: பகல் 12.00 முதல்
மாலை 5.00 வரை

**அனைவரும் வருக! வருக!**

தொடர்புக்கு: 9443489849, 9942776351



# திருச்செவிக்கு விண்ணப்பம்

திருஅருட்பா வசனபாகம்

இயற்கை உண்மைத் தனிப்பெரும் பொருளாயும் இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும் இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுகமாயும் பிரிவின்றி நிறைந்த பெருந்தன்மையராய அருட் பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் வலத்தால் தம் உண்மை உணர்ந்த சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருக் கூட்டங்களை நன் முயற்சியால் தனித்தனி அடைந்து பத்தியாற் பணிந்து ‘அற்புதப் பெருஞ் செயல் புரிகின்ற ஐயர்களே! அருட்பெருஞ்ஜோதித் தனிப் பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட்சமுகம் இருந்த வண்ணம் உள்ளம் உவந்து உரைத்தருளல் வேண்டும்’ என்று விண்ணப்பிக்கின்ற தோறும், ‘எல்லாப் பொருட்கட்கும், எல்லாக் குணங்கட்கும், எல்லாச் செயல்கட்கும், எல்லாப் பயன்கட்கும், எல்லா அனுபவங்கட்கும் மற்ற எல்லாவற்றிற்கும் உருவ, சொரூப, சுபாவ முதலிய இலக்கணங்கள் அனைத்தும் தாமே ஆகியும் தாமல்லாராகியும் தாக்கியுந் தாக்கற்றும் அகத்தும் அகப்புறத்தும் புறத்தும் புறப்புறத்தும் நீக்கமின்றி நிறைந்து விளங்குகின்ற இயற்கை உண்மைக் கடவுளது இயற்கைத் திருவருட் சமுகம் இருந்த வண்ணம் அந்தோ! அந்தோ! எங்ஙனமறிவோம்! எவ்வாறு கருதுவோம்! என்னென்று கூறுவோம்! என்று அவ்வக் கூட்டங்களினுந் தனித்தனி உரைத்துரைத்து நெகிழ்ந்து நெட்டுயிர்க்கின்றார்கள் என்றும்; எல்லாத் தத்துவங்களையும் எல்லாத் தத்துவிகளையும் தோற்றுவித்தலும் இயக்குவித்தலும் அடக்குவித்தலும் மயக்குவித்தலும் தெளிவித்தலுமாகிய தொழில்களை எளிதிற் கொடுத்தற்குரிய பூரண சுதந்தரத்தவர்களாய், இயற்கைச் சத்திய ஞான சுகானுபவ பூரண சொரூப சாத்தியர்களாய் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் தடைபடாத நித்திய சுத்த ஞானதேகிகளாய் பூதசித்தி, கரணசித்தி, இந்திரிய சித்தி, குணசித்தி, பிரகிருதிசித்தி, புருடசித்தி, விந்துசித்தி, பரசித்தி, சுத்தசித்தி, காலசித்தி, கலாசித்தி, விசுவசித்தி, பிரமசித்தி, சிவசித்தி முதலிய பிண்டசித்தி, அண்டசித்தி, பகிரண்டசித்தி, அண்டாண்டசித்தி என்கின்ற அந்தரங்க பகிரங்க தத்துவ தத்துவி சித்திகளெல்லாவற்றையும் திருக்கடைக்கணிப்பாற் செய்ய வல்லவராய், சடாந்த சமரச சத்தியராய் விளங்குகின்ற சமரச சன்மார்க்க ஞானிகளது சித்விலாசத் திருச்சபைக் கண்ணே, புண்ணிய வசத்தாற் புகுதப்பெற்று மனங்கனிந்து வணங்கி நின்று, சர்வ சுதந்தரராய சத்தியர்களே! இயற்கை உண்மைத் தனிப்பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுக மிருந்த வண்ணம் திருவுளம் பற்றித் திருவாய் மலர்ந்து திருவார்த்தை அளித்தருளல் வேண்டும்.

# வாழ்தல்

**துன்பம் தொலைத்து அருள்ஜோதியால் நிறைந்த
இன்பம் எனக்கருள் எழில் சிவபதியே – அகவல் (1028)**

*சென்ற கார்த்திகை தீபத்தன்று நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பில் நடத்தப்பட்ட சத்சங்க நிகழ்வில் சன்மார்க்க அன்பர் மு.பா. பாபு அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து...*

**நா**ன் வரும்போது பார்த்த காட்சி. மக்கள் புயலின் தாக்கத்தால் இங்குண்டான மழையிலும்கூட கிரிவலம் செல்கிறார்கள். கூட்டம் குறையவேயில்லை. இதனின்று நான் உணர்ந்து கொண்ட விஷயம் என்னவென்றால், அதிதீவிர விருப்ப முயற்சியுடைய ஒரு பக்தனை இயற்கை சீற்றத்தால் ஒன்றும் செய்ய முடியாது என்பதுதான்.

இப்போது பக்தர்களைப் பார்த்து "நாம் எல்லோரும் எதற்காக பிறந்திருக்கின்றோம்?" என்ற கேள்வி எழுப்பினார்.

சிறிதும் தாமதமின்றி சத்சங்கம் கேட்க வந்தவர்களில் சிலர் "வாழ்வதற்காகத்தான் பிறந்துள்ளோம்" என்றனர்.

எல்லாம் சரிதான் ஆனால் "வாழ்தல்" என்பதைப் பற்றிய தெளிவான அறிவு நமக்கு இல்லாமையால் ஒவ்வொரு நாளும் காலையிலிருந்து மாலைவரை வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைத்தான் சம்பாதிக்கின்றோமே தவிற உண்மையில் நாம் யாருமே வாழவில்லை. ஒவ்வொரு நாளும் இப்படித்தான் நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டு இருக்கிறோம்.

வாழ வேண்டுமென்று நினைத்து வாழ்க்கைக்குத் தேவையான பொருளை சம்பாதிக்க ஒட்டுமொத்த வாழ்நாளையும் வீணாக்கி இறுதியில் இறந்து போகிறோம். இறக்கும்போது மனதில் திருப்தியின்றி, அமைதியின்றி இன்னும் சிலநாள் வாழ முடியாதா என்ற ஏக்கத்துடன் ஒவ்வொருவரும் இறக்கின்றோம். ஒரு சிறு கதையினைக் காண்போம்.

ஒருவர் தனது வீட்டின் மாடியிலிருந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்தார். அப்போது அவர் ஒரு எறும்பின் செயலைக் காண்கின்றார். அது தன் எடையை விட இரண்டு பங்கு எடையுடைய இலையை இழுத்துச் சென்று கொண்டிருக்கிறது. அதன் மனோபலத்தை நினைத்து சந்தோஷப்பட்டார்.

பிறகு மேலும் ஒரு அதிசயம். அந்த எறும்பு ஒரு பள்ளத்தைக் கடக்க வேண்டியிருந்தது. அச்சமயம் அந்த எறும்பு இழுத்துச் சென்ற அந்த இலையை பின்னால் இருந்து தள்ளி பள்ளத்தை மூடிவிட்டு அந்த இலையின் மீது ஏறி மறுபக்கம் சென்று இப்போது அந்த இலையை இழுத்துச் சென்றது.

*அந்த எறும்பிற்கு இருக்கும் அறிவுக்கூர்மையை எண்ணி வியந்தார் அந்த பெரியவர்.*

*இறுதியாக அந்த எறும்பு தன் இருப்பிடமாகிய புற்றிற்கு வந்தது. இப்போது இலையை தன் புற்றிற்குள் இழுக்க முயன்றது. அந்த எறும்பால் முடியவில்லை. ஏமாற்றமடைந்த எறும்பு பாடுபட்டு இழுத்துவந்த இலையை விட்டுவிட்டு தான் மட்டும் தன் புற்றிற்குள் சென்றது.*

*இத்தனை அறிவும் பலமும் இருந்த அந்த எறும்பிற்கு தனது வீட்டிற்குள் அதை எடுத்துச் செல்ல முடியாது என்ற அறிவு அதற்கு இல்லாமல் போனதை நினைத்து வருந்தினார் அந்தப் பெரியவர்.*

*இந்த எறும்பைப் போலத்தான் மனிதர்களும் வாழ்நாள் முழுவதும் பணத்திற்கும், பொருளுக்கும், புகழுக்கும் நேரத்தை செலவு செய்கின்றனர். ஆனால் மரணம் வரும்போது "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்ற மூத்தோர் வாக்கை மறந்துவிடுகின்றனர். இதனையே நம் வள்ளல் பெருந்தகையும்*

**காடுவெட்டி நிலம் திருத்தி காட்டெருவும் போட்டு**
**கரும்பை விட்டு கடுவிரைத்துக் களிக்கின்ற உலகீர்**
**கூடுவிட்டுப் போயினபின் எதுபுரிவீர் எங்கே**
**குடியிருப்பீர் ஐயோ நீர் குறித்தறியீர் இங்கே**
**பாடுபட்டீர் பயனறியீர் பாழ்க்கிரைத்துக் கழித்தீர்**

*என திருவருட்பாவில் நாம் வாழும் அவல நிலையை கண்டு வாடுகின்றார்.*

*இந்த அறியாமைக்கு காரணம் மாயை. அதாவது ஆன்மாவிற்கும் தேகத்திற்கும் ஒரு தொடர்பு இருந்து கொண்டேயிருக்கும். அதுபோல் ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் ஒரு தொடர்பு இருந்து கொண்டே இருக்கும். இந்த ஆன்மாவிற்கும் கடவுளுக்கும் இருக்கக் கூடிய தொடர்பை மறைப்பதுதான் மாயை. நாம் அனைவரும் வாழ்கிறோம் வாழ்கிறோம் என்று ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறோம் என்பது நம்அனைவருக்கும் தெரியும். இப்படி தெரிந்து கொண்டே அதை மீண்டும் மீண்டும் செய்வதுதான் மாயை.*

*நம் அனைவருக்கும் இப்படிப்பட்ட வாழ்க்கை முறையை மாயை அமைத்துவிடுகிறது. இந்நிலையை நம் வள்ளுவப் பெருந்தகை பின்வருமாறு கூறியுள்ளார்.*

**ஒருபொழுதும் வாழ்வது அறியார் கருதுப**
**கோடியும் அல்ல பல. – நிலையாமை; குறள் (337)**

இதன் பொருள், அடுத்த நொடியில் நாம் வாழ்வோமா இல்லையா என அறியாதவர்கள்தான் கோடிக்கும் மேற்பட்ட நினைவுகளை நினைப்பார்கள் என்பதுதான்.

இதனை நம் வள்ளல் பெருமானாரும் திருஅருட்பாவில்

**இடம்பெறு பொய் வாழ்க்கையிலே இன்பதுன்பம் அடுத்தே**
**எண்ணியெண்ணி இளைக்கின்றீர் ஏழை உலகீரே** என்கின்றார்.

மேலும் மாயையின் மற்றொரு முகம் என்னவென்றால், நம்முடைய குறையை நினைக்கவொட்டாது பிறர் குறையை மட்டுமே பார்க்கவைத்து நாம் வாழ்கின்ற காலத்தில் நம்மை அறியாமை இருளை நோக்கி கொண்டு செல்லும். இதனை ஒரு சிறு கதையின் மூலம் காண்போம்.

ஒரு தோட்டத்தில் வாழைமரமும், தென்னை மரமும் பயிரிடப்பட்டது.

விவசாயி வாழைமரத்தை நன்றாக கவனித்துக் கொண்டான். நிரம்ப தண்ணீர் விட்டான். இதனால் வாழை மரத்திற்கு சற்று கர்வம் அதிகரித்தது.

அது தென்னை மரத்தைப் பார்த்து “ஏ தென்னையே நம் முதலாளிக்கு என்மீது எத்தனை மதிப்பு. ஏன் தெரியுமா? நான்தான் உன்னைவிட அவ்வளவு முக்கியமான மரம்” என்று ஏளனம் செய்தது.

வாழை சீக்கிரத்தில் உயரமாக வளர்ந்தது. தென்னையோ குறைந்த அளவே வளர்ந்திருந்தது.

இதனைக் கண்டதும் வாழை “தென்னையே என்னைப் பார் குறுகிய காலத்தில் நான் எவ்வளவு உயரமாக வளர்ந்திருக்கிறேன். நீ இன்னும் வளராமல் அப்படியே இருக்கிறாயே” என்று அதன் உயரத்தைப் பார்த்து எள்ளி நகைத்தது.

சிறிது காலம் சென்றதும் வாழையில் குலை தள்ளி பார்க்க அழகாக இருந்தது. இப்போது விவசாயி சிலரை அழைத்து வந்து அந்த வாழைமரத்தில் குலை இருப்பதைக் காண்பித்தார்.

இப்போதும் வாழைமரம் “தென்னையே நம் முதலாளி என்னை எத்தனை பேரிடம் காட்டி மகிழ்கின்றார் பார்த்தாயா” என்று பெருமிதமாக கூறி முடிப்பதற்குள் வந்தவர்களில் ஒருவன் அரிவாளால் குலையை வெட்டினான். இதைக் கண்ட வாழைமரம் அதிர்ச்சி அடைந்தது. இந்த அதிர்ச்சி முடிவதற்குள் அவன் அரிவாளால் அந்த வாழை மரத்தையும் அடியோடு வெட்டி வீழ்த்தினான். இதைக் கண்டு வாழைமரத்ம் தன் அவல நிலையைக் கண்டு வருந்தியது.

இந்தக் கதை எதற்கு சொல்லப்பட்டதென்றால் **வாழை மரத்தைப் போல் மரணம் வரும்போது நாம் நமது வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கக் கூடாது. வாழும்போதே வாழ்க்கை என்றால் என்ன என்பதைப் பற்றி சிந்தித்து செயல்படவேண்டும்.**

இதை நம் வள்ளல் பெருமானார் திருஅருட்பாவில்

**மற்றறிவோம் எனச் சிறிதும் தாழ்ந்திருப்பீரானால்**
**மரணமெனும் பெரும்பாவி வந்திடுமே அந்தோ**
**சற்றுமதை நும்மாலே தடுக்க முடியாதே**

என்று பாடியுள்ளார். மேலும் நாம் வாழும் காலத்தில் **"பிறர் குற்றம் விசாரியாதிருத்தல் வேண்டும்"** என்று கரண ஒழுக்கத்தில் அருளியுள்ளார்.

இதல்லாது நமது அறியாமைக்கு காரணமாயிருப்பது நாம் செய்த கர்ம வினைகள். இந்த கர்ம வினைகளின் காரணமாகத்தான் நாம் மாயைக்கு அடிமையாகிவிடுகின்றோம்.

இந்த வினையை மூன்று விதமாகச் சொல்லுவார்கள். **சஞ்சித கர்மம், பிராரப்த கர்மம், ஆகாமிய கர்மம்.**

நாம் பல பிறவிகளில் செய்த எல்லா பாவ புண்ணியங்களின் மொத்த தொகையே **சஞ்சித கர்மம்.**

இந்த சஞ்சிதத்திலிருந்து சிறிது வினையை இப்பிறப்பில் அனுபவிக்கின்றோம். இதற்கு **பிராரப்த கர்மம்** என்று பெயர்.

பிராரப்த கர்மாவை அனுபவித்துக் கொண்டிருக்கும்போதே ஆன்மா**(ஆ)** தன் ஆசை **(காமியம்)** காரணமாக செய்கின்ற கர்மா **ஆகாமிய கர்மம்** எனப்படுகின்றது.

இந்த ஆகாமிய கர்மா சஞ்சித கர்மாவில் சென்று சேர்ந்து கொண்டேயிருக்கும்.

நாம் நம்முடைய சஞ்ஜித கர்மாவையோ அல்லது பிராரப்த கர்மாவையோ மாற்றம் செய்ய முடியாது. ஆனால் இம்மனித தேகத்திற்கு மட்டுமே கொடுக்கப்பட்ட அற்ப சுதந்திரமாகிய ஆகாமிய கர்மத்தைக் கொண்டு நாம் ஆத்ம சாதனைக்கு ஆசைபட வேண்டும்.

**கற்றதென்றும் சாகாத கல்வியென்று கண்டு கொண்டு உன்**
**அற்புத சிற்றம்பலத்தில் அன்பு வைத்தேன் ஐயாவே**
**ஈடணைகள் நீக்கி நமக்கு இன்பளிக்கும் என்று மன்றில்**
**ஆடும் திருவடிக்கே ஆசைவைத்தேன் ஐயாவே**

என்று வள்ளல் பெருமான் அருளியுள்ளதற்கிணங்க ஆத்ம சாதனையில் இச்சையுள்ளவர்களாய் நாம் மாறவேண்டும்.

ஆன்மாவை உணர ஆரம்பிக்கும்போதே நம்முடைய வாழ்க்கை முறை மாறிவிடுகிறது.

ஆன்மாவிற்கு இந்திரியங்களும் கரணங்களும் உபகாரக் கருவிகள் என்பதை முதலில் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒரு வீட்டிலிருக்கின்ற ஒருவனை அவன் சந்தோஷமாக இருக்கிறான் என்று கூறுவோமே தவிர அந்த வீடு சந்தோஷமாக இருக்கிறது என்று கூறமாட்டோம். அந்த வீட்டில் உள்ளவன் சந்தோஷமாக இருக்கிறான் என்றுதான் கூறுவோம். அதுபோல் நம்மை யார் விசாரித்தாலும் **"நான் நலமாக இருக்கிறேன், நான் நலமாக இருக்கிறேன்"** என்று கூறுவோம். இதில் கவனிக்க வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால் 'நான்' என்றால் என்னவென்று தெரியாமலேயே அதாவது **'நான்' என்பது 'ஆன்மா' என்று உணராமல் இந்த உடலை நானென்று நினைத்து** "நான் நலமாக இருக்கிறேன்" என்று கூறுகிறோம். 'நான்' என்பதைப் பற்றி நம் வள்ளல் பெருமானார் உரைநடைப் பகுதியில் கூறியுள்ளதைக் காண்போம்.

"இந்தப் பவுதிக உடம்பிலிருக்கின்ற நீ யாரெனில் நான் ஆன்மா. சிற்றணு வடிவினன். மேற்படி அணு கோடி சூரியப் பிரகாசமுடையது. லலாட ஸ்தானம் இருப்பிடம். கால் பங்கு பொன்மை முக்கால் பங்கு வெண்மை கலந்த வண்ணம்" என்று ஆன்மாவைப் பற்றியும் இந்த தேகத்தில் அது இருக்கும் இடத்தையும் அதன் வண்ணத்தையும் தெள்ளத்தெளிவாக வெளிப்படையாக அருளியுள்ளார்.

இப்படிப்பட்ட ஆன்மாவை நாம் போற்றி பாதுகாக்க வேண்டும். ஏனென்றால் நம் ஆன்மாவை வினைகள் சூழ்கின்றன. அது எப்படிச் எந்த வகையாகச் சூழ்கின்றது என்பது பற்றி நம் வள்ளல் பெருமானார் உரைநடைப் பகுதியில் தெளிவாக விளக்குகின்றார்.

"இப்படிப்பட்ட ஆன்மப் பிரகாசத்தை மறைக்க மாயா சத்திகளாகிய ஏழு திரைகளுண்டு அவையாவன:

| | |
|---|---|
| **கறுப்புத்திரை** | **- மாயாசத்தி, அசுத்த மாயா சத்தி** |
| **நீலத்திரை** | **- சுத்த அசுத்த மாயா சத்தி** |
| **பச்சைத்திரை** | **- கிரியா சத்தி** |
| **சிவப்புத்திரை** | **- பராசத்தி** |
| **பொன்மைத்திரை** | **- இச்சாசத்தி** |
| **வெண்மைத்திரை** | **- ஞானசத்தி** |
| **கலப்புத்திரை** | **- ஆதிசத்தி** |

*நமக்கு ஏன் மரணம் வருகின்றதென்றால் நாம் செய்த வினையின் பயனாக இந்த ஆன்மாவானது ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திற்கு குடிபோகின்றது. இதுவே மரணம். இந்த ஆன்மாவிற்கு இந்த தேகம் ஒரு வாடகை வீடு. வாடகை வீட்டில் வசிக்கின்றவரை மரணமென்பது தொடர்ந்து வந்துகொண்டேயிருக்கும். இதனையே வள்ளுவப் பெருந்தகையும் பின்வருமாறு அருளியுள்ளார்.*

**புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்**
**துச்சில் இருந்த உயிர்க்கு. – நிலையாமை; குறள் (340)**

*உடம்பின் ஒருமூலையில் குடியிருக்கும் உயிருக்கு நிலையாகத் தங்குவதற்குரிய ஒரு இடம் இதுவரை அமையவில்லையோ.*

*அதனால்தான் வள்ளல் பெருமானார் வாடகை வீட்டை சொந்த வீடாக மாற்றிக் கொள்ள வேண்டுமெனக் கூறுகின்றார். இதை எப்படி மாற்றுவது? இதை நம் வள்ளுவப் பெருந்தகையும் தமது திருக்குறளில்*

**வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்**
**வாழ்நாள் வழியடைக்கும் கல். – அறன்வலியுறுத்தல்; குறள் (38)**

*ஒருவன் வீண் நாள் கழிக்காமல் ஒவ்வொரு நாளும் தவறாமல் அறத்தைச் செய்து வந்தால் அந்த அறமே பிறவித் துன்பமாகிய மரணத்தை தடுக்கும்.*

*இந்த வகையில் எந்த அறத்தைச் செய்வது? எது அறம்? என்ற கேள்விக்கு நம் வள்ளல் பெருமானார் தெளிவாக விடை பகருகின்றார்.*

**பொத்திய மலப்பிணிப் புழுக் குரம்பைதான்**
**சித்தியல் சுத்த சன்மார்க்கச் சேர்ப்பினால்**
**நித்தியமாகியே நிகழும் என்பது**
**சத்தியம் சத்தியம் சகத்து ளீர்களே. திருஅருட்பா (1695)**

*எப்படி சொந்த வீடு உள்ளவர்கள் வாடகை வீட்டை தேடிச் செல்ல வேண்டியதில்லையோ அதுபோல்* **சுத்த சன்மார்க்க நெறியில் நின்று** *இந்த தேகத்தையே நித்திய தேகமாக்கிக் கொண்டவர்கள் மரணமடைவதில்லை. இதுதான் வள்ளல் பெருமானார் சொல்ல வரும் பேருண்மை. சுத்த சன்மார்க்க நெறியும் இதில் அருளப்பட்டுள்ள அத்தனை சாதனங்களும் அறநெறியேயாகும் – அருள் நெறியாகும். இதனை நம் வள்ளல் பெருமானாருக்கு இறைவனே அருளியுள்ளதாக பெருமானாரே அருளியுள்ளார்.*

**அருள்நெறி ஒன்றே தெருள்நெறி மற்றெல்லாம்**
**இருள்நெறி என எனக்கு இயம்பிய சிவமே – அகவல்**

*இதனை தெரிவிக்கவே அருட்பெருஞ்ஜோதி இறைவன் நம் வள்ளல் பெருமானாரை இப்பூவுலகிற்கு வருவித்தார்.*

**சந்திர சூரியர் ஒளிபெற விளங்கும்**
**தனிஅருட் பெருவெளித் தலத்தெழும் சுடரே**
**வந்திர விடைஎனக்கு அருளமுது அளித்தே**
**வாழ்கஎன்று அருளிய வாழ்முதற் பொருளே**
**மந்திரமே எனை வளர்க்கின்ற மருந்தே**
**மாநிலத்திடை எனை வருவித்த பதியே**
**தந்திரம் யாவையும் உடையமெய்ப் பொருளே**
**தனிநடராஜ என் சற்குரு மணியே. – திருஅருட்பா (1392)**

*என்று தன் வருகையின் நோக்கத்தினை தெரிவிக்கின்றார் நம் வள்ளல் பெருமானார். இந்த சுத்த சன்மார்க்கத்தின் மரபு மற்றும் சிறப்பு என்னவென்றால்* **"சாகாத கல்வியை"** *தெரிவிப்பது ஒன்றே இதன் சிறப்பு. இதற்குச் சான்றாக தாம் இயற்றிய ஜீவகாருண்ய ஒழுக்கத்தில்* **"உலகத்தில் உயர் பிறப்பாகிய மனிதப் பிறப்பை பெற்றுக் கொண்டவர்கள் இந்தப்பிறப்பினால் அடையத்தக்க தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகத்தை காலமுள்ளபோதே விரைந்து அறிந்து அடைய வேண்டும்"** *என்று அருளியுள்ளார். இந்த தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகமாகிய வீடுபேற்றை அடையும் வழியையும் கருணைக் கடலாகிய வள்ளல் பெருந்தகை பின்வருமாறு அருளியுள்ளார்.*

**"நம்முடைய தலைவராகிய கடவுளை நாமடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். அவ்வருள் அன்பினால் அல்லது வேறு வகையில் அடைவது அரிது. அவ்வன்பு ஜீவகாருண்யத்தால் அல்லது வேறு வகையில் வராது. ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு"**

*இவ்விதம் நாம் அநித்தியமான உலகியல் வாழ்விற்கு நேரத்தை குறைத்து நமக்குத் தலைப்பட்ட ஆன்ம இன்ப சுகமாகிய வீடுபேற்றை (மரணமிலாப் பெருவாழ்வை) பெற்றுத் தரும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தைக் கடைபிடித்து அன்பை அடைந்து அதன் மூலம் அருளை அடைந்து இம்மனிதப்பிறப்பெடுத்ததன் நோக்கத்தினை நிறைவேற்றுவோம்.*

**இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ – மூத்தோர் சொல்**

*திருச்சிற்றம்பலம்*

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

Advertisement

மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி


ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு

தர்மசாலை பலர் சகாயத்தினாலேயே நிலைபெற வேண்டுமாதலால், ஜீவதயவுள்ள புண்ணியர்கள், தங்கள் தங்களாற் கூடிய வரையில் பொருள் முதலிய உதவி செய்து அதனால் வரும் லாபத்தை பாகஞ் செய்துகொள்ள வேண்டுமென்பது எங்கள் கோரிக்கை.

வள்ளலார் தீஞ்சுவை நீரோடை தர்ம சாலை, என்ற பெயருக்கு
S/B A/c.No.10895139303, IFSC# :SBIN 0000958; SWIFT:SBIN INBB457
ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, நெய்வேலி கிளை
CT: 9842679999 / 9442327059 , 04142-259143

வாடகை - ரூ666 முதல்! தவணை - ரூ999 முதல்!!

Anti-Virus ( Free ) OS ( Licenced )










பழையது ! தரம் உயர்த்தப்பட்டது !! புதியது !!!
Old Refurbished New

**BeyondexC Network Solutions**
பியான்டக்ஸ்சி நெட்வொர்க் சொல்யூசன்ஸ்
#174/321,ஆற்காடு ரோடு, தோஷி கார்டன், அடிதளம்#20,
வடபழனி, சென்னை - 600026.
போன்:+91(44)43069262,9444408804,9840398666
eMail:govee@virtues2goal.com

# ஞான நிறைப் பெருவிழா

இறை பக்தியை வளர்க்க ஆலயங்களில் தத்துவங்களை விக்கிரகங்களாக்கி வழிபடச் செய்தனர் முன்னவர்கள். அதிலும் குறிப்பாக மனித தேகத்தில் கழுத்திற்கு கீழேயுள்ள உடம்பின் தத்துவங்களைக் கொண்டதாக ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அக்காலம் தொட்டு இக்காலம் வரை ஆகம விதிகளை கொண்டுதான் ஆலயங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

இவற்றினின்று மாறுபட்டு, திருவருட்பிரகாச வள்ளல் பெருமானார் புதியதாக ஓர் ஆலயத்தை உத்திர ஞான சிதம்பரம் என்று போற்றப்படும் வடலூர் பெருவெளியில் ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்டு, தத்துவங்களுக்கெல்லாம் அதீதமாய் **"சத்திய ஞான சபையை"** உருவாக்கி அருளினாா.

சத்திய ஞான சபை என்னுள் கண்டனன் என தான் உள் கண்ட அனுபவத்தினை அவர் உள்ளுணர்ந்து பெற்ற சித்திப் பெருவாழ்வை, பேரின்பக் களிப்பை, சுத்த சன்மார்க்கத்தின் லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை காரணமாய் எல்லோருக்கும் அளிப்பதாகவும், எல்லோரும் தான் பெற்ற பெருங்களிப்பை ஐயம், திரிபு, மயக்கமின்றி அறிந்து அடைய வேண்டுமென சித்தம் கொண்டதாக அருளியுள்ளார்.

வள்ளல் பெருமனார் தான் பெற்ற அனுபவத்தை எல்லோரிடத்து பகரும் காலத்தில் எக்காலத்திலும், எவ்விடத்திலும், எவ்விதத்திலும் தடைபடாத இறை இன்ப பெருங்களிப்பை தன் உள்ளகத்தே எப்போதும் கண்டு இன்புற்று இருப்பதாய் அருளியுள்ளார்கள்.

இறைவன் தன் பௌதிக உடம்பிலும், எலும்பிலும், தன்னுடைய அன்பிலும், இருதயத்தில் கொண்ட தயவிலும், உயிரிலும், உயிரினுக்கு உயிரிலேயும், இயற்கை குணத்திலும், இன்சொல்லிலும், அதனைச் செப்புகின்ற நாக்கிலும், செவிப் புலன் இசையிலும், இருகண் மணியிலும், அதன் ஒளியிலும், தன்னுடைய அனுபவத்திலும், இயல்பான அறிவிலும், அந்த அறிவினுக்கு அறிவிலும் அதுவாகவே கலந்து முழுவதும் தன்மயமாக்கி இனித்து மென்மேலும் ததும்பி நிறைவான அமுதாகவும், நுண்ணிய பெருங்கருணை வெள்ளமாகவும், அழியாத சுகமாகவும், சுகத்தின் அதீதமாகவும் விளங்கிய நித்திய பரிபூரணமான சுகத்தை, சுகத்தின் அதீதத்தை நடராஜபதி மாலையில் இடம்பெற்றுள்ள திருஅருட்பா பாசுரம் விளக்குகின்றது.

வடலூர் பெருவெளியில் உள்ள சத்திய ஞானசபை அமையப் பெற்ற இடத்தே "உத்திர ஞான சிதம்பரம்" என பெயரிட்டதன் காரணம் யாதெனில், தில்லையில் சிதம்பரம் முன்னமே உள்ளது. அது பூர்வம், பழையது. ஆனால் வடலூர் பெருவெளியில் அமைந்துள்ள சிதம்பரம் உத்திரம், புதியது. இதில் பூர்வம் என்பது தெற்கு. உத்திரம் என்பது வடக்கு. ஆதலில் தில்லை தென்சிதம்பரம், வடலூர் வடசிதம்பரம்.

**இந்தவெளியில் நடமிடத் துணிந்தீரே அங்கே**
**இதைவிடப் பெருவெளி இருக்குதென்றால் இங்கே**
**இடுக்கில்லாமல் இருக்க இடமுண்டு நடம்செய்ய**
**இங்கம்பலம் ஒன்றங்கே எட்டம்பலம் உண்டைய**

முந்தைய சிதம்பரத்தில் இறைவன் நடம் புரிய ஒரு அம்பலம் மட்டுமே இருக்கிறது. ஆனால் புதிய சிதம்பரத்தில் இறைவன் இடுல்லாமல் நடம்புரிய எட்டு அம்பலங்கள் இருக்கின்றது. ஆகவே முந்தைய சிதம்பரத்தை விட பெருவெளியான எட்டு அம்பலமுடைய வடலூரில் அமைந்துள்ள ஞானசபையில் ஆட வருமாறு அருட்பெருஞ்ஜோதி இறைவனை அழைக்கின்றார் நம் பெருமானார்.

உத்திர ஞான சிதம்பரம் என்னும் பெயர் திருவருளால் ஆக்கப்பட்ட ஆக்கச் சிறப்புப் பெயரென உரைநடைப் பகுதியில் **சன்மார்க்க சத்திய சங்க விண்ணப்பத்தில்** விளக்கியுள்ளார்கள். அதனினும் மேலாக உத்திர ஞான சிதம்பரம் பற்றிய ஒரு பாமாலைப் பதிகத்தை திருவருட்பாவில் இயற்றி அதற்கு **உத்திர ஞான சிதம்பர மாலை** என பெயரிட்டு அருளினார்.

உத்திர ஞான சிதம்பர மாலையில் நம் வள்ளல் பெருமானார் தான் அடைந்த அருளனுபவத்தை மிகவும் தெளிவாக அருளியுள்ளார்.

தன்னிடமுள்ள உள் கசடுகளை நீக்கி மயக்க உணர்வானது மிகுந்து மேலெழாமலும், காமம், மோகம் என்னும் இருளிலிருந்து காத்தும் அருளோங்குகின்ற அருட்ஜோதியை அடைவித்ததென்றும்; அதுவே நல்ல வரங்களை அளித்ததென்றும்; ஞானப் பெருவெளிக்கு உயர்த்தி திருவருள் இன்ப உலகில் தான் வாழ அருள் செய்ததென்றும்; சுத்த சன்மார்க்க நெறியில் சேர்ந்துள்ள என்னை இறைவனிடம் வருக என்று சேர்த்துக் கொண்டதென்றும்; ஆக்கல், காத்தல் முதலான ஐந்தொழிலை அளித்ததென்றும்; மற்றும் பிறப்பினைப் போக்கி சாகா வரத்தை தந்தருளியது என்றும் உத்திர ஞான சிதம்பரத்தின் சிறப்புகளைப் பற்றி சிறப்பித்து பாடி அருளியுள்ளார்.

**ஒத்தாரையும் இழிந்தாரையும் நேர்கண்டு உவக்க**
**ஒருமித்தாரை வாழ்விப்பது ஏற்றார்க்கு அமுதம் விளம்பி**
**இடுவித்தாரைக் காப்பது சித்தாடுகின்றது மேதினிமேல்**
**செத்தாரை மீட்கின்றது உத்தர ஞான சிதம்பரமே.**


*அவரவர் தரத்திற்கு ஒத்தவரையும் தாழ்ந்தவர்களையும் சமமாகக் காணும் நன்மக்களை இனிதாக வாழச் செய்வது, வறுமையுற்று இரந்து வந்தவர்களுக்கு அமுதமாகிய உணவினை அளித்து அவர்தம் பசித்துன்பத்தை நீக்குபவரை காத்து அருளுவது, அனிமா முதலிய சித்துக்களைச் செய்து இந்த மண்ணில் இறந்தவர்களை மீட்பது போன்ற அனைத்தையும் செய்ய வல்ல சிறந்த இடம் உத்தர ஞான சிதம்பரமேயாம்.*

*உத்தர ஞான சிதம்பரம் என்பது எது என்ற நமது ஐயத்திற்கு நம் பெருமானார் மிகத் தெளிவாக விடை பகருகின்றார்.* **"திருந்தும் என்உள்ளம் திருக்கோயில் ஞான சித்திபுரம் என சத்தியம் கண்டேன்"** *திருந்துகின்ற உள்ளமே திருக்கோயில் அதுவே உத்தர ஞான சிதம்பரம் என்னும் வடலூரர். அதாவது, திருந்துகின்ற உள்ளமே ஞானம் அளிக்கக்கூடிய மெய்யறிவு விளங்கும் இடமென உலக மாந்தர்கள் அறிந்து செயல்பட வேண்டும் என்று சத்தியம் செய்து அறிவிக்கின்றார்.*

*அருளாளர்களின் இறையனுபவம் என்பது அவர்களின் கையேடுகளாகிய நூல்களின் மூலமே அறிந்துகொள்ள இயலும். நம் வள்ளல் பெருமானாரின் இறையனுபவ நிலை பற்றி சொல்லவோ, எழுதவோ இயலாது. பெருமானாரின் இறை அனுபவத்தை அவரே மிகத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளார்கள். அவ்வாறான அனுபவங்களைக் குறிப்பிடுகையில் இறைவனைக் கண்டேன், அணைத்தேன், கட்டித் தழுவினேன் கலந்து களிப்புற்றேன் என்று தான் பெற்ற பேரின்பத்தை பற்றி அருளியுள்ளார்.*

*நம் வள்ளல் பெருமானார் அவர்கள் திருவுரு பெற்றவர், முத்தேக சித்தி அடைந்தவர். அவரின் பொன்னுடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் இறையின்பப் பேற்றினை பெற்று நித்திய சுகாதீதத்தில் உள்ளது. ஆதலால் அவருள்ளத்தில் யாதொரு குற்றமும் இல்லை. எது குற்றம் என்று அறியாமலேயே மூடர்களாய் வாழும் மாந்தர்களுக்கு உணர்த்தவே இவ்விதம் எல்லாக் குற்றங்களையும் தன்மேலேற்றிப் பாடியுள்ளார்.*

*மேலும்* **"ஏன் உரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன்"** *என்பார் பெருமானார். ஜீவர்கள்பால் கொண்ட இந்த தயவினால் உலக மாந்தர்களுக்கு சுத்த சன்மார்க்க பெருநெறியை அருளிசைந்தார். இந்த சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய வேதமே* **ஜீவகாருண்ய ஒழுக்கமாகும்.**




ஜீவகாருண்ய ஒழுக்கத்தில், உலக ஜீவர்களை காத்து அருளுகின்ற கடவுளின் தன்மை பற்றியும் அவரை வழிபடுவது பற்றியும் ஒவ்வொரு ஜீவர்களும் அவர் அருளைப் பெற்று பேரின்ப சித்திப் பெருவாழ்வு வாழ்வதற்கான வழிமுறைகளையும் யாவரும் எளிதாக அறிந்து கொள்ளும்படி அருளியுள்ளார்.

எல்லா உயிர்களையும் காத்து அருளுகின்ற கடவுள் ஒருவரே என்றும் அவர் இயற்கை உண்மையராய், இயற்கை அறிவினராய், இயற்கை இன்பினராய் எங்கும் வியாபித்துள்ளார் என்றும் கடவுளின் தன்மையைப் பற்றி மிக எளிய தமிழில் அருளியுள்ளார்கள். இதனையே வடநூலார் சத்து, சித்து, ஆனந்தம் எனப்படுகின்ற சச்சிதானந்தப் பொருள் என்பர்.

இங்ஙனம் இயற்கை வடிவினராய் பரமாகாச வெளியிலும், ஆன்மாவில் சிற்றணு வடிவினராயும் விளங்குகின்ற இறைத் தத்துவத்தை யாவரும் எளிதில் ஐயமற அறியும் வண்ணம் புறத்தில் வடலூர் பெருவெளியில் உத்தர ஞான சிதம்பரத்தில் சத்திய ஞானசபையினை உருவாக்கினார்.

**இதில் பரமாகாச வெளியென்பது வடலூர் பெருவெளியாம். ஞானசபை என்பது ஆன்மப் பிரகாசம். இந்த பிரகாசத்திற்குள் இருக்கும் பிரகாசமே கடவுள். இதை உணர்த்தவே சத்திய ஞானசபையின்கண் ஜோதி வடிவினராய் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை வீற்றிருக்கச் செய்தார்.**

இங்ஙனம் பெரும் பேறுகள் பெற்ற வடலூர் பெருவெளியில் அமைந்துள்ள சத்திய ஞான சபையினை வருகின்ற தைப்பூச தினத்தன்று நாம் எல்லோரும் உண்மை அன்புடன் ஆண்டவரை வழிபாடு செய்து அருளைப் பெற்று ஞான நிறைவை அடைவோமாக!

**திருஅருட்பா**

**சார்உலக வாதனையைத் தவிர்த்தவர் உள்ளகத்தே**
**சத்தியமாய் அமர்ந்தருளும் உத்தம சற்குருவை**
**நேர்உறவே எவராலும் கண்டுகொளற் கரிதாம்**
**நித்திய வான்பொருளை எலாநிலைகளும் தானாகி**
**ஏர்உறவே விளங்குகின்ற இயற்கைஉண்மை தன்னை**
**எல்லாம்செய் வல்லபத்தை எனக்களித்த பதியை**
**ஓர்உறவென்று அடைந்துலகீர் போற்றி மகிழ்ந்திடுமின்**
**உள்ளமெலாம் கனிந்துருகி உள்ளபடி நினைந்தே.**

## மூத்தோர்சொல் அமிர்தம்

*ஒரு விவசாயி கடவுளிடம் "கடவுளே! உனக்கு விவசாயத்தைப் பற்றி என்ன தெரியும்? நீ நினைத்த நேரத்தில் மழை பெய்விக்கிறாய். நீ நினைத்தபடி காற்றை வீச வைக்கிறாய். உனக்கு ஏன் இந்த வேண்டாத வேலை. பேசாமல் இந்த வேலையை ஏதாவதொரு விவசாயியிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்துவிடு" என்று கோபமாகக் கத்தினான்.*

*அதற்கு கடவுள் "சரி. அந்த வேலையை நீயே பார்த்துக் கொள்" என்று கூறி மறைந்தார்.*

*இப்போது விவசாயிக்கு மிகுந்த மகிழ்ச்சி. 'மழையே வா' வந்தது. ஈரமான நிலத்தை பக்குவமாக உழுது நெல் விதைத்தான். 'காற்றே மெல்லென வீசு' என்று தேவையான அளவு காற்று வீசும்படி செய்து வளர்ந்த நெற்பயிரைக் காத்தான். அறுவடை நேரம் வந்ததும் ஒரு கற்றை நெற்கதிரை எடுத்து உதிர்த்து அதை திறந்து பார்த்தான். அதிர்ந்தான். உள்ளே அரிசி இல்லை.*

*கோபத்தோடு "கடவுளே இது என்ன சோதனை. நான் எல்லாவற்றையும் சரியாகத்தானே செய்தேன். பிறகு ஏன் அரிசி இல்லை" என்று கத்தினான்.*

*அதற்கு கடவுள் "அப்பா நான் சில சமயம் வேகமாக காற்றை வீசுவேன். அப்போது நெற்கதிரானது தாயை இறுக்கி அணைத்துக் கொள்ளும் குழந்தையைப்போல் வேரினை ஆழப்படுத்தி நிலத்தை இறுகப்பிடித்துக் கொள்ளும். கோடையை அதிகப்படுத்தி தண்ணீரை வற்றச் செய்வேன். அப்போது வேரினை எல்லாப்பக்கமும் பரவவிட்டு தண்ணீரைத் தேடிக்கொள்ளும்.*

*இப்படிச் செய்வதால் அது வலுவுள்ளதாக வளர்கின்றது. நீ எல்லா வசதிகளையும் அமைத்துக் கொடுத்ததால் உன் பயிருக்கு சோம்பல்தனம் வந்துவிட்டது. தளதளவென வளர்ந்துவிட்டதே தவிர ஆரோக்கியமான தானியங்களை தருவதற்கு அவற்றிற்குத் தெரியவில்லை" என்றார். இதைக் கேட்டவுடன் "ஐயா வழக்கம்போல் தாங்களே இந்த வேலையை வைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி மழை பெய்விக்கும் வேலையையும், காற்று வீசவைக்கும் வேலையையும் மீண்டும் கடவுளிடமே தந்தான்.*

**மனித அறிவு எல்லைக்குட்பட்டது. இந்த சிற்றறிவைக் கொண்டு பேரறிவான கடவுளின் செயலை நம்மால் உணர்ந்து கொள்ள முடியாது. எனவே இறைவனை சரணடைந்து வாழ்வது ஒன்றே நமக்கு நன்மை பயக்கும்.**

**என்னால் ஆவதொன்றும் உனக்கில்லை எனினும் எந்தாய்**
**உன்னால் வாழுகின்றேன் எனக்கு உண்மை உரைத்தருளே** - திருஅருட்பா

**வி**வேகானந்தரின் தாயார் சமையலுக்காக காய்கறிகளை வெட்டிக்கொண்டிருந்தார். அச்சமயம் விவேகானந்தர் தன் தாயிடம் தான் துறவறம் மேற்கொள்ளப்போவதாகக் கூறினார்.

அப்போது அவரது தாயார் அடுப்படியிலிருந்து காய் வெட்ட கத்தி ஒன்றை எடுத்துவரச் சொன்னார்.

விவேகானந்தரோ "நீங்கள் காய் வெட்டிக் கொண்டுதானே இருக்கிறீர்கள். பிறகு ஏன் கத்தி கேட்கிறீர்கள்" என்றார்.

அதற்கு அவர் தாய் "நீ எடுத்துவா" என்று கட்டளையிட்டார். பிறகு விவேகானந்தர் கத்தி எடுத்து வந்து கொடுத்தார்.

அவர் தாய் "இப்போது நீ துறவறம் போகவேண்டாம்" எனக் கூறி மறுத்துவிட்டார்.

விவேகானந்தருக்கு ஏனென்று விளங்கவில்லை. தாயின் பேச்சைக் கேட்டு அவர் துறவு எண்ணத்தைக் கைவிட்டார்.

சில வருடங்கள் கழித்து தனது தாயிடம் தான் துறவறம் போக விரும்புவதாக மீண்டும் கூறினார். இம்முறையும் அவர் தாய் அடுப்படியிலிருந்து கத்தி எடுத்துவருமாறு கூறினார்.

விவேகானந்தரும் கத்தி எடுத்துவந்து தந்தார். ஆனால் இம்முறையும் அவர் துறவு செல்ல அவரது தாயார் அனுமதிக்க வில்லை.

தாயின் செயலுக்கு காரணம் புரியாமல் அமைதியானார் விவேகானந்தர். காலங்கள் சென்றன. விவேகானந்தருக்கோ துறவு மேற்கொள்ள வேண்டும் என்ற எண்ண அழுத்தம் அவரை வேறெந்த காரியங்களிலும் ஈடுபடவிடவில்லை.

இம்முறை துறவு சென்றேயாக வேண்டும் என்ற எண்ணத்தோடு தாயிடம் அனுமதி கேட்டார். இம்முறையும் அவர் தாயார் கத்தி எடுத்துவருமாறு உத்தரவிட்டார்.

தாயார் அனுமதி தருவாரோ இல்லையோ என்ற எண்ணத்தோடு கத்தி எடுத்துவந்து கொடுத்தார். இப்போது அவர் அன்னை "நீ துறவறம் போகலாம்" என மகிழ்ச்சியோடு அனுமதி கொடுத்தார்.

விவேகானந்தருக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் இம்முறை ஏன் அனுமதி கொடுத்தார் என்ற சந்தேகமும் இருந்தது. எனவே தாயிடம் "அன்னையே பலமுறை உங்களிடம் நான் துறவறம் செல்ல அனுமதி கேட்டேன். அப்போதெல்லாம் அனுமதி கொடுக்காமல் இப்போது அனுமதி அளித்துள்ளீர்களே. இது ஏன்?" என வினவினார்.

அதற்கு அவர் தாயார் “நீ துறவறம் செல்ல அனுமதி கேட்கும்போதெல்லாம் நான் கத்தி எடுத்துவரச் சொல்வேன். நீயும் கத்தி கொண்டுவந்து கொடுக்கும்போது கைப்பிடி பகுதியை நீ வைத்துக் கொண்டு கூர்மையான பகுதியை என்னிடம் கொடுத்தாய். ஆபத்து பிறருக்கு பாதுகாப்பு உனக்கு என்கிற சுயநல உணர்ச்சியின் வெளிப்பாடு அது. இப்படி பலமுறை செய்தாய். ஆனால் இம்முறைதான் நீ கூர்மையான பகுதியை உன்பக்கம் வைத்து கைப்பிடி பகுதியை என்னிடம் நீட்டினாய்” என்றார்.

மேலும் தொடர்ந்து “ஒரு தவம் செய்பவன் தனக்கு துன்பம் வந்த போதிலும் பிறருக்கு நன்மை உண்டாகும்படியான காரியங்களையே செய்யவேண்டும். அப்படியில்லாதவன் துறவு மேற்கொள்வதும் தவம் செய்வதும் வீணான காரியம்.

அன்பும் கருணையும் கொண்டவன் செய்யும் தவமே அவனை பூரணத்துவத்திற்கு கொண்டு செல்லும் மேலும் இத்தன்மை கொண்டோர் பூணும் துறவே நாட்டுக்கும் நன்மை பயக்கும். சுயநலம் உடைய யாரும் தவமும் செய்யமுடியாது துறவுக்கும் அத்தகையோர் தகுதி கிடையாது.


அந்த பக்குவம் இப்போதான் உனக்கு வந்துள்ளது. எனவேதான் உன்னை இப்போது துறவு செல்ல அனுமதித்தேன்” என்றார்.

**உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**
**அற்றே தவத்திற்கு உரு – குறள் 251**

**தனக்கு உற்ற துன்பத்தை பொறுத்தலும் மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதுமே தவத்திற்கு வடிவமாகும்.**




## விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன



### *வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு விளம்பர விபரம்*

அன்பர்கள் நமது மாத இதழில் தங்கள் நிறுவனங்கள், கடைகள் தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.

1) முழுபக்க விளம்பரம் - ரூ. 2000

2) அரை பக்க விளம்பரம் - ரூ 1000

3) முன் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000

4) பின் அட்டை உள் பக்கம் (கலர்) - ரூ 3000



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**சென்ற மாதத் தொடர்ச்சி...**

**சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும் 173**
**அகரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி 174**

*சிகரமும் – சகரஇகரமாகிய "சி" என்னும் எழுத்தும்*
*வகரமும் – வகர அகரமாகிய "வ" என்னும் எழுத்தும்*
*சேர் – சிகர வகரங்கள் சேர்ந்த (சி+வ=சிவ),*
**"சிவ" என்னும் மகாகாரண பஞ்சாக்கரமும்**
*உகரமும் – உகரம் எனப்படும் "உ" என்னும் எழுத்தும்*
*அகரமும் – அகரம் எனப்படும் "அ" என்னும் எழுத்தும்*
*சேர் – அகர உகரம் சேர்ந்த (அ+உ+ம்)*
**ஓம் என்னும் ஓங்காரபஞ்சாக்கரமும்**

*ஆகிய அருட்பெருஞ்ஜோதி – ஆகிய ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி.*

*நானேயோ தவம் செய்தேன்* **சிவாயநம** *எனப்பெற்றேன்*
*தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்*
*தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள்செய்தான்*
*ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே 555*

*என்னும் மணிவாசகர் திருவாசகமும்*

*நான்செய்த புண்ணியம் யாதோ* **சிவாய நம** *எனவே*
*ஊன் செய்த நாவைக்கொண்டு ஓதப்பெற்றேன் எனை ஒப்பவரார்*
*வான்செய்த நான்முகத் தோனும் திருநெடுமாலு மற்றைத்*
*தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே*

*என்னும் வள்ளலார் திருவருட்பாவும் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள்.*

*"நமச்சிவாய வாழ்க!" என்று தொடங்கும் திருவாசகம் ஈற்றயலில் "சிவாயநம எனப்பெற்றேன்" என்று நிறைவுறுகிறது.*

*நமசிவாய என்பது தோத்திரமாயும் சிவாயநம என்பது சாத்திரமாயும் (அனுபவமாயும்) ஆன்றோர்களின் ஆட்சியிற் காணப்பெறுகிறது.*

*நமச்சிவாய என்பது பெயர். சிவாயநம என்பது மந்திரம். "நாதன்நாமம் நமச்சிவாயவே", "நம்பன் நாமம் நமச்சிவாயவே" முதலிய சுந்தரர் வாக்குகளைக் காண்க. "நாதன் நாமம் நமச்சிவாயம் காண் நாம் பெறும் துணையே", "நாலு*

*மாமறைப்பொருள் நாமம் நமச்சிவாயம் காண் நாம் பெறும் துணையே" என்னும் வள்ளற் பெருமான் வாக்குகளைக் காண்க. இவற்றால் நமச்சிவாயம் என்பது இறைவன் திருநாமம் என்பது போதரும். திருவாசகத்தில் "நமச்சிவாய வாழ்க" என்பது அவன் திருநாமத்தை வாழ்த்தியது. "நானேயோ தவஞ்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்" என்பது அவன் திருமந்திரத்தைக் கூறியது.*

*"நமசிவாயம்" என்று பெயருடையோர் மிகப்பலர். நடுத்தெருவில் நின்று நமசிவாயம் என்று கூப்பிட்டால் நாலுபேராவது திரும்பிப் பார்ப்பார்கள். சிவாயநம என்று கூப்பிட்டால் சிரிப்பார்கள். சிவாயநம என்று பெயரிடப் பெற்றோர் ஒருவருமிலர். நமசிவாயம் நமசிவாயம் என்று பெயரிடுவது பெருவழக்கு. சிவாயநம எனப்பெயரிடுவதே இல்லை. இறைவன் திருநாமத்தை மக்கள் தம் பெயராக வைத்துக் கொள்வது வழக்கு. மந்திரத்தைப் பெயராக வைத்துக்கொள்வது வழக்கன்று.*

*"சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளுமில்லை" என்று ஔவையார் அறுதியிட்டு உறுதி கூறுகிறார்.(நல்வழி 15)*

*சிவாயநம என்றால் செம்பு பொன்னாகும், சிவாயநம என்றால் உடம்பு பொன்னாகும் என்று திருமூலர் கூறுகிறார். "செம்பு பொன்னாகும் சிவாயநம என்னில்" (903) "சிவாயநம என்னும் குளிகையிட்டுப் பொன்னாக்குவன் கூட்டையே" (2709) என்பன திருமூலர் திருமந்திரம்.*

*வகரவித்தை, தகரவித்தை என்று இரண்டுவித்தைகள் பெரியோர் அனுபவத்திற் கூறப்படும். வகரம் தகரம் என்பன பரிபாஷை, குழூஉக்குறி. குறியீடுகள். வகரம்(வ) - பொன், தங்கம். தகரம்(த) - மனிதஉடம்பு. செம்பைப் பொன்னாக்குதல் வகரவித்தை - இரசவாதம். உடம்பைப் பொன்னாக்குதல் தகரவித்தை - தேகவாதம். வள்ளற்பெருமான் வகர தகர வித்தைகளில் வல்லவர். வகர தகர வித்தைகளைக் கூறும்போது மேற்குறித்த இரு திருமந்திரங்களையே வள்ளற்பெருமான் ஆதாரமாக எடுத்துக்காட்டுகிறார்.*

*தூல சூக்கும பஞ்சாக்கரங்களின் திறங்களைச் சுருங்கக் கூறின் -*

*நமசிவாய என்பது பெயர்*

*சிவாயநம என்பது மந்திரம்*

*நமசிவாய என்பது வேதமுறை*

*சிவாயநம என்பது ஆகமமுறை*

*நமசிவாய - சமயகுரு உபதேசிப்பது*

சிவாயநம – ஞானகுரு உபதேசிப்பது

நமசிவாய – சாதாரண பக்குவர்க்கு உரியது

சிவாயநம – தீவிர பக்குவர்க்கு உரியது.

நமசிவாய – இம்மை மறுமைப் பயன்களை அளிப்பது; கருமசித்தி

சிவாயநம – முத்திப்பயனை அளிப்பது; ஞானசித்தி

நமசிவாய – தோத்திரத்துக்கு

சிவாயநம – சாத்திரத்துக்கு (அனுபவத்துக்கு) என்பது தெளிவு.

**காரண பஞ்சாக்கரம்**

தூலபஞ்சாக்கரமும் சூக்குமபஞ்சாக்கரமும் ஐந்து எழுத்துகள். காரண பஞ்சாக்கரத்தில் **சி**கர **வ**கர **ய**கரமாகிய மூன்றே மூன்று எழுத்துகள் – **சிவய. ந**கர **ம**கரங்கள் நீங்கிவிடுகின்றன. **நம** இல்லை. சிவய மட்டுமே நிற்கிறது. யகரமாகிய ஆன்மா வகரமாகிய சத்தியோடும் சிகரமாகிய சிவத்தோடும் சேர்ந்துநிற்கிறது.

இதில் இன்னொரு வகையும் உண்டு. யகரத்துக்கு முன்னே உள்ள 'சிவ' யகரத்துக்குப் பின்னேயும் இடம்பெற **சிவயசிவ** என்பதும் உண்டு. இதில் ஆன்மா(ய) நடுவில் நிற்க. இருபுறமும் சிவமும் சக்தியும் சிகரவகரங்கள் (சிவ) நிற்கும்.

இதிலும் இன்னொரு வகையும் உண்டு. **சிவயவசி** என்பது அது. இதில் யகரமாகிய ஆன்மா நடுவில் நிற்க அதன் இருபுறமும் சக்தியும் சிவமும் நிற்கின்றன.

ந ம சி வ ய – தூலம்

சி வ ய ந ம – சூக்குமம்

சி வ ய<br>
சி வ ய சி வ } காரணம்<br>
சி வ ய வ சி

இக் காரணபஞ்சாக்கரம் அதிசூக்கும பஞ்சாக்கரம் என்றும் முத்திபஞ்சாக்கரம் என்றும் கூறப்பெறும். உயிர் (ய) நடுவே நிற்கச் சிவமும் சத்தியும் அதன் இருபுறமும் இருப்பதால் இது இருதலைக்கொள்ளி, **இருதலைமாணிக்கம்** என்றும் கூறப்பெறும்.

**ஒருதலை மாணிக்க முன்ன ரெனக் குபதேசம் செய்தான்**
**இருதலை மாணிக்கம் பின்னரும் பேசி இருளறுத்தான்**
**இரிதலை மற்றை அயன்தலை சூட்டிய கங்கையின் மூ**
**எரிதலைச் சூலத் தொடுநடிப் பான்கச்சி ஏகம்பனே.**

என்பார் கண்ணுடைய வள்ளலார்.

காரண பஞ்சாக்கரத்தில் நகரமகரங்கள் (மறைப்பும் மலமும்) இல்லை. சிகர வகர யகரங்களே (சிவம், சத்தி, உயிர் இம் மூன்றுமே) உள்ளன. உயிர்(ய) நடுவில் இருக்கிறது. சிவமும் சத்தியுமாகிய சிகரவகரங்கள் அதன் இருதலையும் இருக்கின்றன.

உயிர் நகர மகரங்களாகிய மறைப்பு மலங்களின் நீங்கி, வகரமாகிய அருட்சத்தியின் மூலம், சிகரமாகிய சிவத்தை அடைவதே, பஞ்சாக்கர அனுபவம்.

தூல சூக்கும பஞ்சாக்கரங்களைப் பாடியது போன்றே காரண பஞ்சாக்கரத்தையும் வள்ளலார் பாடியிருக்கிறார். அருள்நாம விளக்கம் என்னும் பதிகத்தின் பத்துப்பாடல்களிலும் **“ஓம் சிவாய என்று உன்னுதி மனனே”** என்பது மகுடம்.

**மகாகாரண பஞ்சாக்கரம்**

மகாகாரண பஞ்சாக்கரம் – **சிவ.** சிவமும் சத்தியுமாகிய ஈரெழுத்துகளே தனித்துநிற்பது.

அருட்பெருஞ்ஜோதி அகவலில் இப்போது நாம் உரைகாணும் இடம் இதுதான்.

**சி**கரமும் **வ**கரமும் சேர்தனி **உ**கரமும்
**அ**கரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி

பின்னே அகவலின் இறுதிப்பகுதியில் இதுபோன்ற ஒரு இடம் வருகிறது.

**அ**கரமும் **உ**கரமும் அழியாச் **சி**கரமும்
**வ**கரமும் ஆகிய வாய்மை மந்திரமே.

சிகரவகரம் – **சிவ,** மகாகாரண பஞ்சாக்கரம்
அகரஉகரம் – ஓங்காரம். **ஓம்**

சிகரமும் வகரமும் சேர்ந்த மகாகாரண பஞ்சாக்கரமாகவும் அகரமும் உகரமும் சேர்ந்த ஓங்காரமாகவும் தனி அருட்பெருஞ்ஜோதியே உள்ளது. தனு – ஒப்பற்ற

“**வ**கார வெளியில் **சி**கார உருவாய்
**ம**காரத் திருநடம் நான்காணல் வேண்டும்
விகார உலகை வெறுப்பாயோ தோழி
வேறாகி என்சொல் மறுப்பாயோ தோழி” 4281

என்னும் பெருமான் வாக்கும் இங்கு நோக்கத்தக்கது.

வகாரவெளி – அருள்வெளி
சிகாரஉரு – சிவவடிவு
மகாரநடனம்– சங்கார தாண்டவம்

*தூலபஞ்சாக்கரம் (நமசிவய), சூக்குமபஞ்சாக்கரம் (சிவயநம) காரணபஞ்சாக்கரம் (சிவய) மகாகாரண பஞ்சாக்கரம் (சிவ) ஆகிய நான்கையும் இதுகாறும் கண்டோம். இனிக் காண்பதற்கு எஞ்சியுள்ளது சிகாரமாகிய (சி) மகாமனு ஒன்றே. ஈண்டு அதனையும் காண்போம்.*

**மகாமனு (சி)**

*மகாகாரண பஞ்சாக்கரமாகிய சிகர வகரங்கள் இரண்டினுள், வகரமாகிய அருளையும் தன்னிடத்து லயப்படுத்தி அடக்கிக் கொண்டு சிகரம்மாத்திரம் தனித்து நிற்பது மகாமனு –* **சி.**

*இது* **நாயோட்டு மந்திரம்** *என்றும்* **பெருஎழுத்து** *என்றும்* **பேசாஎழுத்து** *என்றும் கூறப்பெறும்.*

*நாயோட்டும் மந்திரம் என்பது பரிபாஷை. 'ச்சீ' என்று நாயை ஓட்டுவது (விரட்டுவது) வழக்கம். ஆதலின் சிகரம் நாயோட்டு மந்திரம் என்று பரிபாஷையாற் குறிப்பிடப் பெற்றது.*

**நாயோட்டு மந்திரம்** *நான்மறை வேதம்*
*நாயோட்டு மந்திரம் நாத னிருப்பிடம்*
*நாயோட்டு மந்திரம் நாதாந்த சோதி*
*நாயோட்டு மந்திரம் நாமறி யோமே 3051*

*என்பது திருமூலர் திருமந்திரம்.*

*அஞ்செழுத்தும் எட்டெழுத்தும் ஆறெழுத்தும் நாலெழுத்தும்*
*பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் – நெஞ்சழுத்து*
**பேசும் எழுத்து**_டனே_ **பேசா எழுத்தி**_னையும்_
*கூசாமற் காட்டக் கொடி.*

*என்பது உமாபதிசிவம் அருளிய கொடிக்கவி (4)*

*பிஞ்செழுத்து –* **வ.** *பெருவெழுத்து –* **சி**

*பேசும்எழுத்து –* **வ.** *பேசாஎழுத்து –* **சி**

*மகாமனுவாகிய* **சி** *என்னும் ஓரெழுத்தையும் வள்ளற்பெருமான் திருவருட்பாவிற் பாடியுள்ளார்.*

*ஓரெழுத்தில் – சி என்னும் ஓரெழுத்தில்*

*ஐந்து உண்டென்பார் – விந்து, நாதம், சகரஒற்று, அகரம், இகரம், (விந்து+நாதம்+ச்+அ+இ) ஆகிய ஐந்து உண்டென்பார்*

*அது ஊமையெழுத்து ஆவதென்ன – பேசாஎழுத்து ஆவதென்ன?*

*ஐந்தெழுத்துகளிலும் அது பெருவெழுத்து ஆனதால் பேசா எழுத்து ஊமை எழுத்து ஆயிற்று.*

**ஏசாத தந்திரம் பேசாத மந்திரம் ஈசான மேலென்றீர் வாரீர்**
**ஆசாதி இல்லீரே வாரீர்**

என்னும் பெருமான் வாக்கில் **பேசாதமந்திரம்** என்றது ஊமை எழுத்தும் பெருவெழுத்துமாகிய **சி**கரத்தையே.

வள்ளற்பெருமான் உபதேசத்தில் 'சி' என்பதற்குக் கூறும் பொருள் பின்வருமாறு:

**சி** என்னுமெழுத்துக்குப் பொருள் ஒருவாறு:

இதில் அடங்கிய பீஜம் ஐந்து.

தோன்றி அசைதலாகிய விந்து ஒன்று

அதன் புடைபெயர்ச்சி ஒலியாகிய நாதம் இரண்டு.

அதன் வண்ண வடிவமாகிய வரி அக்கரத்தின் சகரமெய் யென்னும் 'ச்' மூன்று.

அதனது குணங்களை வெளிப்படுத்தும் ஆதி அக்கரமாகிய பிரணவ மூல 'அ'கரம் நான்கு.

இதைக் தன்வண்ணச் சுபாவத்தோடு வெளியில் தோன்றச் செய்வித்து விளக்கும் அருட்பிரணவமாகிய 'இ'கரம் ஐந்து.

ஆகக்கூடிய வித்துக்களைந்தும் ஓர் உருவமாய்ச் 'சி' கரமாயிற்று.

இதன் இலக்கணம் விரிக்கிற்பெருகும். அனுபவத்தாலறிக.

இதற்குப்பொருள் சுத்த சன்மார்க்க காலத்தில் வெளிப்படும் என்று பெருமானது உபதேசம் கேட்ட ஓரன்பர் குறித்து வைத்துள்ளார்.

அகவலில் இவ்விடம் சிகர வகரங்களைப் பற்றிக் கூறுவதால், பெருமான் **சிவ** என்பதற்கு உபதேசத்திற் கூறியுள்ள விளக்கமும் இங்கறியத்தக்கது. அதுவருமாறு:

**சிவ** என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாத சர்வவல்லமையுடையது.

**சி** என்பதற்குப் பொருள் அனாதியாய் மலமில்லாதது.

**வ** என்பதற்குப் பொருள் சர்வவல்லமையுடையது.

**ஒரு முக்கிய குறிப்பு**

இவ்விடத்தில் மிகவும் முக்கியமான குறிப்பொன்றைத் தெரிவிக்க விரும்புகிறோம்.

பஞ்சாக்கரத்தில் பெரிதும் ஈடுபட்டு அதன் அனுபவம் முற்றிலும் கைவரப்பெற்ற வள்ளற்பெருமான் பின்னாளில் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரால் சன்மார்க்க மகாமந்திரமாகிய அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரத்தை அருளப்பெற்றார். இறைவன் தமக்குத் தெரிவித்த அவ்வண்ணமே அதனைப் பெருமான் அன்பர்களுக்குத் தெரிவித்தார்.

அருட்பெருஞ்ஜோதி மகாமந்திரம் உருவாவதற்கும் வெளிப்படுவதற்கும் முன்பே பாடப்பெற்றது அருட்பெருஞ்ஜோதி அகவல். ஆகவே சிகரமும் வகரமும் உகரமும் அகரமும் ஆகிய அருட்பெருஞ்ஜோதி என்று பாடியருளினார்.

சிகர வகரங்களையே வள்ளற் பெருமான் அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை என்று கண்டு காட்டியருளினார்.

அருட்பெருஞ்ஜோதி என்பது சிகரத்தின் விளக்கம்

தனிப்பெருங்கருணை என்பது வகரத்தின் விளக்கம்

அருட்பெருஞ்ஜோதி மந்திரம் பஞ்சாக்கரத்திற்கு ஒப்பானது.


ஓங்காரம் பஞ்சாக்கரம் முதலிய மந்திரங்கள் மறை பொருளானவை. அருட்பெருஞ்ஜோதி மந்திரம் வெளிப்படையானது.

ஓங்காரம் பஞ்சாக்கரம் முதலிய மந்திரங்கள் மந்திரங்களாக மட்டுமே வழங்குதற்குரியவை. அருட்பெருஞ்ஜோதி மந்திரமோ மந்திரத்திற்கு மந்திரமாகவும், கோஷத்திற்கு கோஷமாகவும் வழங்கும் சிறப்புடையது.


பஞ்சாக்கரமந்திரம் அதற்குரிய பக்குவர்கட்கு மட்டுமே உபதேசித்தற்குரியது. அருட்பெருஞ்ஜோதி மந்திரம் பக்குவம் பாராது எல்லாருக்குமே உபதேசிக்கத்தக்கது. பக்குவம் இல்லாதோரையும் நாளடைவில் பக்குவப்படுத்துவது. இவ்வகைகளில் பஞ்சாக்கரத்திலும் சிறந்தது என்று சொல்லலாம்.

சைவர்கள் பஞ்சாக்கரத்தையும் சமரச சுத்த சன்மார்க்கிகள் அருட்பெருஞ்ஜோதி மந்திரத்தையும் ஓதி உய்வதே உரிய முறை. அருட்பெருஞ்ஜோதி மந்திரம் வெளிப்பட்ட பின் சன்மார்க்க அன்பர்களுக்கு வேறு மந்திரங்கள் இன்றியமையாதன அன்று.

“இத்தருணம் ஆண்டவர் எல்லாவற்றையும் நீக்கி, எல்லோரும் மேலான இன்பத்தை அடையும் பொருட்டு முடிவான இன்ப அனுபவத்திற்குச் சாதக சகாயமான திருவருள் மாகாவாக்கியத் திருமந்திரத்தை தமது உண்மையை வெளிப்படக் காட்டும் மகாமந்திர வாக்கியத்தை எனக்கு வெளியிட்ட அவ்வண்ணம் எனது மெய்யறிவின்கண் அனுபவித்து எழுந்த உண்மை அறிவனுபவானந்த இன்பத்தை நீங்கள் எல்லவரும் என்போல் ஐயம், திரிபு, மயக்கமின்றி அடைய என்னுள்ளே எழுந்து பொங்கிய ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமையைப் பற்றிக் குறிப்பித்தேன்; குறிப்பிக்கின்றேன்; குறிப்பிப்பேன். நமது ஆண்டவர் கட்டளையிட்டது யாதெனில் நமக்கு முன் சாதனம் கருணை ஆனதினாலே, ஆண்டவர் முற்சாதனமாக அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங் கருணை அருட்பெருஞ்ஜோதி என்னும் திருமந்திரத்தை வெளிப்படையாக எடுத்துக் கொண்டார்.” – திருஅருட்பா வசனபாகம்.



# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். ***தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.***

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| காலை உணவிற்கு | - ரூ.2,500/- |
| மதிய உணவிற்கு | - ரூ.6,500/- |
| இரவு உணவிற்கு | - ரூ.3,500/- |
| மாதப்பூச அன்னதானத்திற்கு (மூன்று வேளைக்கும்) | - ரூ.12,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | - ரூ.4,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு ஞெய் (5 இடங்களுக்கு) | - 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:** **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு பாபு சாது

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - *606 604.*

*செல்:* +91 9443489849, +91 9942776351

*அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-*

**8012680865, 7502026565**

# டிசம்பர் மாதம் நடந்த ஆழ்நிலை தியான முகாமில் கலந்து கொண்ட அன்பர்களின் அனுபவப் பகிர்வு



இந்த மூன்று நாட்கள் ஆழ்நிலை தியானத்தில் மனதில் சற்று அமைதியைக் கண்டேன். மௌன தியானத்தில் மற்றதை மறந்து தன்னை அறிய முயர்ச்சித்தேன். என்னுடைய உடம்பு சற்று மென்மையாக இருப்பதை உணர்கிறேன். சில கெட்ட எண்ணங்கள் விலகியதைப்போல் உணர்கின்றேன். இந்த வருடத்தில் மற்ற எல்லா நாட்களும் குடும்பம், அலுவலகம் என மற்றவர்களுக்காக செலவழித்தேன். இந்த மூன்று நாள் எனக்காக, தன்னை அறிவதற்காக செலவு செய்தது பெருமையாக உள்ளது. – அரவிந்த், நாகர்கோயில். செல்: 9944318091

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே உண்மையான கடவுள் பக்தி. மேலும் ஞானம், வைராக்கியம் இவைதான் பக்திக்கு அடிப்படை என்பதையும் புரிந்துகொண்டேன். – பத்மாவதி, சென்னை. செல்: 8015293838

எனக்கு இங்கு வருவதற்கு முன் கடவுள் நம்பிக்கை கிடையாது. இங்கு வந்த பிறகு கடவுள் வேறெங்கும் இல்லை எனக்குள் ஜோதி வடிவமாக இருக்கிறார் என்பதை உணர்ந்தேன். ஒவ்வொரு உயிர்க்குள்ளும் கடவுள் இருக்கிறார் என்பதை உணர்ந்தேன். தீமைகள் செய்யாமல் தீமை செய்ய துணை போகாமல் நன்மைகள் மட்டும் செய்ய அறிந்து கொண்டேன். – ஹரிஹரன், திருப்பூர். செல்: 7373439708

இன்றைய நாளில் நான் மிகுந்த மகிழ்ச்சியை அனுபவித்தேன். புலால் உண்ணுதலை கைவிட உறுதியேற்கிறேன். என்னிடம் கொடுத்துச் செல்ல ஏதுமில்லை. ஆனால் விட்டுச் செல்ல எத்தனையோ உள்ளது.

கொன்றால் பாவம் தின்றால் போச்சு என்பதன் உண்மையான விளக்கத்தை இப்போதுதான் அறிந்தேன்.

கொல்வது ஒருவராக இருந்தாலும் அதனை நாம் புசிக்கும்போது அதன் பாவம் எல்லாம் நம்மைதான் வந்து சேரும் என்தை நன்றாக உணர்ந்து கொண்டேன். இதில் எவ்வகையிலும் மாற்றம் இல்லை.

எனவே எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த உறுதி எடுத்துள்ளேன்.

– ந. ஜெயபால்

நான் தியான வகுப்பில் இதற்கு முன் கலந்து கொண்டதில்லை. இதுவே முதல் முறை. நாம் பக்குவம் அடையமுடியாமல் நம் மனம் எப்படி தடுக்கிறது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது ஒரு புதுமையான அனுபவம். நம் உடலில் மெய்ப்பொருள் எங்கு உள்ளது என்பதை உணர முடிந்தது. நன்றி!

– முத்துமாரிக்கனி, திருநெல்வேலி. செல்: 8124781535

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly January 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2014-16 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

## பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

நாள் **29** ஜனவரி

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

**நாள்: 29-1-2017, ஞாயிற்றுக் கிழமை**

**இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,**
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம், பொள்ளாச்சி.



**நிகழ்ச்சி நிரல்:**

- அகவல் பாராயணம்
- திருவருட்பா இசைக்கச்சேரி:- வழங்குபவர்
  தயவுதிரு. கலைச்செல்வன் & குழுவினர், சிதம்பரம்.
- படிக்கட்டுகள் - சிறப்பு சத்சங்கம்
  வழங்குபவர் சாது அருண் அவர்கள், தி.மலை.
- மகாதேவமாலை - சிறப்பு சத்சங்கம்
  வழங்குபவர் தயவுதிரு. இருசுப்பிள்ளை ஐயா, கோவை.

**அனைவரும் அருள் பெற வருக! வருக!!**

தொடர்புக்கு: +91 9843644523, +91 9443489849

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை - 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865